★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 8560

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆவணி 12உ திங்கள் (27—8—56) ★ ★ வெளியூர்: ஆவணி 13உ செவ்வாய் (28—8—56) [இதழ் 66

அரிசிவிலை ஏற்றத்திற்கு மற்றுமோர் காரணம்?

42,000 டன் அரிசி ஏற்றுமதி செய்யப்பட்டதாம்!

புதுடில்லி, ஆக 25—

1956-ம் ஆண்டில் முதல் ஆறுமாத காலத்தில் இந்தியாவிலிருந்து 44,000 டன்னுக்கும் அதிகமான உணவுப் பொருள்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதாக உணவு விவசாய இலாகா மந்திரி ஏ. பி. ஜெயின் மக்கள் சபையில் கூறியிருக்கிறார்.

இதில், 42,000 டன் அரிசி என்றும், சோளம், கோதுமை, கேழ்வரகு முதலியன எஞ்சிய 2,000 டன் அளவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது என்றும் அந்த மந்திரி விளக்கம் கூறியிருக்கிறார்.

'இலங்கைக்குத் தமிழர் தூதுவராக வேண்டும்'

இலங்கை தி. மு. க. வற்புறுத்துகிறது

'ஓராண்டு பொறுப்போம்; பிறகு கிளர்ச்சி'

கொழும்பு, ஆக 26—

'இந்தியாவிலிருந்து இலங்கைக்கு நியமிக்கப்படும் தூதுவர் ஒரு தமிழராகவே இருக்கவேண்டும்' என்று இலங்கை திராவிட முன்னேற்றக் கழகத்தவர் தீர்மானம் ஒன்று நிறைவேற்றியிருக்கின்றனர்.

இலங்கை தி. மு. கழக ஏழாம் ஆண்டுவிழாப் பொதுக்கூட்டம் இன்று, இங்கு நடைபெற்றது.

கூட்டத்தில், சமஷ்டிக் கட்சித் தலைவர் சி. வன்னியசிங்கம், அமிர்தலிங்கம் எம்.பி. ஆகியோரும் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியிருக்கின்றனர்.

"இலங்கையில் வாழும் இந்தியரில் 100-க்கு 99 பேர் தமிழர்கள்; எனவே, இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வரும் தூதுவர் ஒரு தமிழராக இருக்க வேண்டுவது மிக அவசியமாகும். எனவே, டில்லி சர்க்கார், இலங்கைத் தமிழரது இந்தக் கோரிக்கையை, ஓராண்டுக்குள் ஏற்காவிட்டால் கழகம் நேரடி நடவடிக்கையில்—கிளர்ச்சியில் ஈடுபடும்." என்று, கூட்டத்தில் தீர்மானம் நிறைவேறியுள்ளது.

அண்மையில் திரிகோணமலையில் நடைபெற்ற மாநாட்டின் முடிவுகள், திட்டங்கள் குறித்து, தோழர்கள் வன்னியசிங்கம், அமிர்தலிங்கம் ஆகியோர் கூட்டத்தில் எடுத்துரைத்திருக்கின்றனர்.

சேத்துப்பட்டு, புளியந்தோப்பு கூட்டங்களில் அண்ணா

பல்லாயிரக் கணக்கான மக்கள் கருத்துரை பெற்றனர்

சென்னை, ஆக. 27—

சென்னையில் சேத்துப்பட்டு, புளியந்தோப்பு வட்டங்களில் கடந்த 25, 26-ந் தேதிகளில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்ட மாபெரும் பொதுக் கூட்டங்களில் அண்ணா அவர்கள் கருத்துமிக்க சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்.

சேத்துப்பட்டு:

சென்னை 33-வது வட்டம் சேத்துப்பட்டு தி. மு கழகச் சார்பில், 25-ந் தேதி மாலை 6-30 மணியளவில், டி. பி. மருத்துவமனை அருகில் உள்ள திடலில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது

50 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள்—ஏராளமான தாய்மார் உட்பட மைதானம் முழுவதும் நிரம்பியிருந்தனர்.

கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய தோழர் வ சங்கரநாராயணன் அவர்கள், கூட்டத்தின் நோக்கத்தையும், வட்டத்தில் கழகத்தின் பணி குறித்தும் எடுத்துரைத்து முன்னுரை கூறினர்.

அடுத்து, தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள், காமராசர் ஆட்சி தமிழ் நாட்டு மக்களுக்கு இழைத்த துரோகம் குறித்தும், கழகம் தேர்தலில் ஈடுபடுவதின் காரணங்களை எடுத்துரைத்தும் சிறிது நேரம் பேசினர்.

இறுதியாக அண்ணா அவர்கள், நாட்டின் அரசியல் நிலைகளைத் தெளிவுபடுத்தியும், கழகம் தேர்தலில் ஈடுபடுவதின் அவசியம் குறித்தும் அரியதோர் கருத்துரை நிகழ்த்தினர்கள்.

கூட்டத்தில் அண்ணா அவர்களுக்கும், என். வி. நடராசன் அவர்களுக்கும், பல மன்றங்கள் சார்பாக மலர் மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

பல குழந்தைகளுக்கு அண்ணா அவர்கள் பெயரிட்டார்.

தலைவர் முடிவுரையுடன் கூட்டம் இனிது முடிவுற்றது

புளியந்தோப்பு:

சென்னை 18-வது வட்டம் புளியந்தோப்பு தி. மு கழகத்தின் ஆறும் ஆண்டுவிழாப் பொதுக் கூட்டம் 26-8-56 மாலை 6-30 மணியளவில் நடைபெற்றது.

எண்ணற்ற தாய்மார்கள் உட்பட சுமார் 50 ஆயிரம் மக்கள் திரண்டிருந்தனர்.

கூட்டத்திற்கு தோழர் தி. சு. நல்லதம்பி அவர்கள் தலைமை தாங்கினர்.

தோழர் சா. கோ. நாராயணசாமி சிறிது நேரம் பேசியதும், தோழியர் சத்தியவாணிமுத்து அவர்கள், காங்கிரசாரின் ஆளும் திறனற்றப் போக்குக் குறித்தும், மக்கள் வரிப்பணம் பாழாகும்விதம் குறித்தும் பேசினர்.

பின்னர் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் சிறிது நேரம் பேசியதும், அண்ணா அவர்கள், பல குழந்தைகளுக்குப் பெயரிட்டு, அவற்றின் பெற்றோரை மகிழ்வித்துவிட்டு, கழகம் தேர்தலில் ஈடுபடுவதற்கான காரண காரியங்களை அழகாக விளக்கியும், தேர்தலில் ஈடுபடுவோம் என்று தெரிவித்ததும் சீறிப் பாய்வோருக்கு தக்க பதில் அளித்தும் அரியதோர் உரை நிகழ்த்தி, கூடியிருந்தோருக்கு தெளிவூட்டினார்கள்.

தலைவர் முடிவுரைக்குப் பின் நன்றி கூறலுடன், கூட்டம் இனிது முடிவுற்றது. (ந. - நி.)

கோரிக்கைகளை ஏற்காவிட்டால்!

'வேலைநிறுத்தம் செய்வோம்'

சென்னை துறைமுகத் தொழிலாளர் எச்சரிக்கை

சென்னை, ஆக. 26—

"செப். 15-ந் தேதிக்குள் சம்பள விகிதத்தைத் திருத்தியமைக்க வேண்டுமென்பது போன்ற கோரிக்கைகள் ஏற்கப்படாவிட்டால், கால வரையறையின்றி வேலை நிறுத்தம் செய்வோம்" என்று, சென்னை துறைமுகத் தொழிலாளர் சங்கத்தினர், துறைமுக 'டிரஸ்டு'க்கு முன்னறிவிப்புக் கொடுத்துள்ளனர் என்று தெரியவருகிறது. 6,000 தொழிலாளர்கள் துறைமுகத்தில் பணியாற்றுகின்றனர்.

நெய்வேலி சோதனைகள் வெற்றி

நிலக்கரி தோண்டுவதற்கு இயந்திரங்கள் வாங்கப் போகிறார்களாம்

புதுடில்லி, ஆக. 26—

நெய்வேலியில் நடைபெற்ற தண்ணீர் இறைப்பு சோதனைகள் பூரண வெற்றி பெற்றுவிட்டனவாம்.

இது குறித்த நிபுணர்களின் அறிக்கை கிடைத்துவிட்டது என்பதால், இனி நிலக்கரி தோண்டி எடுக்கும் வேலை துவங்கலாமாம்.

எனவே, இதற்காக டில்லி சர்க்கார் ரூ. 1½ கோடிக்கு இயந்திர சாதனங்கள் தருவிக்க உத்திரவிட்டிருக்கிறார்களாம்.

இந்த இயந்திரங்கள் கிடைத்ததும் சுரங்க வேலை ஆரம்பமாகுமாம்.

மத்தியப்பிரதேச மாகாணத்திலுள்ள ஒரு கோவிலுக்கு, ஒரு தேங்காய், ஒரு வெற்றிலை, இரு பாக்குகள் ஆகியவற்றைப் பார்சலில் அனுப்ப, மோரிஸ் தீவிலுள்ள இந்தியரொருவர் ரூ. 71-4-0 செலவழித்திருக்கிறார்; இந்தப் பார்சலுக்கு விமானக் கட்டணம் மட்டும் ரூ. 26-6-0 ஆகிறது.

'இலங்கையிலிருந்து வெளியேற்றப்பட்டவர்களுக்கு வாழ்வு தர தனியாக ஒரு இலாகா வேண்டும்'

திருச்சூர் மலையாள அகதிகள் மாநாட்டில் தீர்மானம்

திருச்சூர், ஆக. 26—

"இலங்கையிலிருந்து வெளியேற்றப்பட்ட இந்தியர்களின் சிக்கல்களைத் தீர்ப்பதற்காகத் தனியாக ஒரு அகதிப் புனரமைப்பு இலாகாவைத் திறக்கவேண்டும்" என்று, இலங்கையிலிருந்து வெளியேற்றப்பட்ட மலையாள அகதிகள் மாநாட்டில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

இங்கு நடைபெற்ற இம்மாநாட்டில், கேரளக் கடற்கரைப் பகுதிகளில் வந்து குவிந்து வேலையின்றித் தத்தளித்து அவதியுறும் அகதிகளுக்கு வேலையும், வாழ்க்கை வசதியும் தர, 'அம்பர் இராட்டை' நிலையங்கள் உட்பட குடிசைத் தொழில்களையும் சிறு தொழில்களையும் ஏற்படுத்தித் தரவேண்டுமென்றும் மாநாடு கேட்டுக்கொண்டது.

மேற்கு வங்க சர்க்கார் ஊழியர்களுக்கு 'பஞ்சப்படி' உயர்வு

1,18,000 பேர் பெறுவர்

கல்கத்தா, ஆக. 26—

ரூ 250-ம் அதற்குக் குறைந்ததுமான அடிப்படைச் சம்பளம் பெறும் மேற்கு வங்க அரசாங்க ஊழியர்கள் (போலீசார் நீங்கலாக) 1,18,000 பேர் இம்மாதம் முதல் தங்களுடைய 'பஞ்சப் படி'த் தொகையில் ரூ. 2 அதிகம் பெறுவார்கள். இவ்விதம் அவர்களுக்குப் 'பஞ்சப் படி'யை உயர்த்திக் கொடுப்பதனால் அரசாங்கத்திற்கு ஆண்டுதோறும் ரூ. 2,80,000 அதிகச் செலவாகுமென்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

உணவுத் தானியங்களின் விலை மிகவும் ஏறியிருப்பதால் ஏதாவது நிவாரணமளிக்க வேண்டுமென்று குறைந்த சம்பளம் வாங்கும் அரசாங்க ஊழியர்கள் முறையிட்டதனாலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

ஏறத்தாழ 30,000 பேரடங்கிய போலீசாருக்குச் சம்பளத்தில் சென்ற ஆண்டு உயர்வு கொடுக்கப்பட்டது

ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கும் சிறிது நிவாரணம் அளிக்க வேண்டுமென்பது அரசாங்கத்தின் நோக்கமாயிருக்கிறது; ஆனால் அவர்கள் அரசாங்க ஊழியர்களாயில்லாத காரணத்தால் அதற்கு என்ன செய்யலாம் என்பது ஆராயப்பட்டு வருகிறது.

டில்லியில் உருவாகும் சாணக்கியபுரியின் எழில்!

புதுடில்லி, ஆக 25—

புதுடில்லியில் உருவாகிவரும் சாணக்கியபுரி, மொத்தம் 900 ஏக்கர் பரப்புள்ளது என்றும், அதில் 216 ஏக்கர் பூங்காக்களும் பாதைகளும் கொண்டவை என்றும் மக்கள் சபையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்க்காரின் பரிசீலனையில் இல்லையாம்!

'நடுத்தர, நீண்ட இழைப் பருத்தி வகைகளில் இறக்குமதியை நிறுத்திவிடுவது பற்றிய யோசனை எதுவும் சர்க்காரின் பரிசீலனையில் இல்லை' என்று, மாநிலங்கள் சபையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'ஒரு நாளைக்கு சம்பளம் வாங்கமாட்டோம்'

சென்னை சர்க்கார் ஊழியர்கள் மீண்டும் அறிவிக்கின்றனர்

மதுரை, ஆக 26—

'வரும் அக்டோபர் முதல் நாளன்று சம்பளம் வாங்குவதில்லை' என்று மீண்டும் பதிவு பெறாத சர்க்கார் ஊழியர் சங்க மத்திய கமிட்டி முடிவு செய்திருக்கிறது.

ஒரு நாள் மட்டும் சம்பளம் வாங்க மறுப்பது என்று கடந்த முறையும் அறிவித்திருந்தனர்.

ஊழியர்களுக்கு நிவாரணம் அளிக்கும் விவகாரத்தில் சர்க்கார் முடிவு எதும் கூறவிட்டால் ஒரு மணி நேர அடையாள வேலை நிறுத்தம் செய்யலாமா என்பது குறித்து வரும் அக்டோபர் 17-ந் தேதியன்று ஊழியர்களிடை வாக்கெடுப்பு நடத்தப்படும் என்றும், ஊழியர்கள் சம்மதித்தால் மத்திய கமிட்டி குறிப்பிடும் நாளில் ஒருமணி நேர அடையாள வேலை நிறுத்தம் செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

'முன்போல இந்த முறை கடைசி நேரத்தில் முடிவை மாற்றிக்கொள்ளும் விவகாரமே கிடையாது' என்று, சங்கத் தலைவர் கண்ணன்குட்டி மேனன் தெரிவித்திருக்கிறார்.

'மத்திய சர்க்கார் ஊழியர்களுக்குத் தரப்படுகிற அளவு பஞ்சப்படி மட்டுமேனும் உடனடியாகத் தரப்பட வேண்டும்' என்று சென்னை சர்க்கார் ஊழியர்கள் வற்புறுத்திக் கோருகின்றனர்.

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 27—8—'56 திங்கள்

சூயஸ் சிக்கல்

எகிப்தின் எதிர்காலம் பிரகாசமானதாக அமைவதற்கு வழிவகுத்தோன் என்ற பெருமை மட்டுமல்லாது, பொங்கி எழுந்துவரும் அராபிய உலக தேசிய எழுச்சிக்கு வழிகாட்டும் தலைமைப் பதவியும் தனக்குக் கிடைக்க வேண்டும் என்ற பேரவாவின் விளைவாக, எகிப்தியக் குடியரசுத் தலைவர் நாசர், சூயஸ் கால்வாய் நிறுவனத்தைத் தேசிய மயமாக்கியதும், அதை ஒட்டி எழுந்த நிலைகளும், இங்கு ஏற்கனவே விளக்கப்பட்டிருக்கின்றன.

நிறுவனம் தேசிய மயமாக்கப்பட்ட உடன், பிரிட்டனும் பிரான்சும், நிதானமிழந்த நிலையில் படபடப்போடு எழுப்பிய போர்க் கூச்சல், எழுந்துள்ள சிக்கலுக்குப் பரிகாரம் தேடுவதாக அமைய முடியாது என்பதை, கசப்பும் இனிப்பும் நிறைந்த அனுபவப் பொக்கிஷமாக, உலகிலேயே சிறந்த ஞானசிரியனாக விளங்கும் கடந்த காலம் இடித்துரைத்தது. இழந்துவிட்ட நிதானத்தைத் திரும்பப் பெற்ற மேற்கு வல்லரசுகள், 22 நாடுகள் அடங்கிய மாநாடு ஒன்றை இலண்டனில் கூட்டின.

அந்த மாநாட்டில் எகிப்து கலந்துகொள்ளவில்லை. கலந்துகொள்ளாமலிருப்பதற்கு, நியாயம் அதற்குத் துணைநின்றது.

நடைபெற்ற மாநாடு, இறுதியான முடிவேதும் காண முடியாத நிலையில் முடிவுற்றிருக்கிறது. மாநாட்டின் நடவடிக்கைகள் அத்தனையையும் எகிப்தியத் தலைவர் நாசரிடம், அமெரிக்கா உள்ளிட்ட ஐந்து நாடுகள் தூதுக்குழு ஒன்றின் மூலம் சமர்ப்பித்து, மாநாட்டில் 17 நாடுகள் ஒப்புக்கொண்ட சிக்கலுக்கான அமெரிக்கப் பரிகாரத்தை ஒப்புக்கொள்ளுமாறு நாசரை வற்புறுத்துவது என்ற முடிவே மாநாட்டின் நேரடி விளைவு.

எகிப்துடன் ஒப்பந்தம் செய்துகொண்டு ஒரு 'சர்வதேச போர்டு' முழு அதிகாரத்துடன் கால்வாயின் நிர்வாகத்தை மேற்கொள்ள வேண்டும் என்பதுதான் நாசரிடம் எடுத்துச் சொல்லப்படவிருக்கும் அமெரிக்கத் திட்டமாகும்.

ஆனால், இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்வதற்கில்லை என்று நாசர் நேற்று முன்தினமே அறிவித்துவிட்டார்.

கால்வாய் வெட்டப்பட்ட காலத்தில் 1868-ம் ஆண்டில் ஏற்பட்ட உடன்பாட்டில் கையொப்பமிட்ட நாடுகளையும், சூயஸ் கால்வாயை இன்று உபயோகித்துவரும் நாடுகளையும் கொண்ட ஒரு மாநாடு நடத்தத் தாம் தயாராக இருப்பதாகவும், அந்த மாநாட்டில், சூயஸ் கால்வாயின் நிர்வாகம் திறம்பட நடந்து எல்லா நாட்டுக் கப்பல்களுக்கும் எல்லா காலங்களிலும் நிர்ப்பந்தமற்ற — பாகுபாடில்லாத போக்குவரத்துவசதியினை உறுதி செய்து தருவதாகவும், சூயஸ் கால்வாயை நிர்வகிக்கக் கூடிய எகிப்திய நிறுவனத்தை ஐ. நா. காரியாலயத்தில் பதிவு செய்து கொள்வதாகவும், நாசர், ஏற்கனவே இலண்டன் மாநாட்டிற்கு வருவதற்கில்லை என்று தெரிவித்த நேரத்திலேயே அறிவித்திருந்தார்.

சூயஸ் கால்வாய் எகிப்தின் ஆதிபத்திய உரிமைக்கு உட்பட்ட ஓடுகால் என்பதில், தகராறு கிடையாது என்பதைத் தெரிந்துகொண்ட இந்தியா, நாசர் அறிவித்தக் கருத்தின் அடிப்படையில் ஒரு பரிகாரத் திட்டத்தை வகுத்து, இலண்டன் மாநாட்டில் சமர்ப்பித்தது.

ரஷ்யா, இலங்கை, இந்தோனேஷியப் பிரதிநிதிகளின் ஆதரவை மட்டும் பெற்று, இலண்டன் மாநாட்டில் இந்தியத் திட்டம் நிராகரிக்கப்பட்டுவிட்டது.

மாநாடு கூடுவதற்கு முன்பு, மேற்கு வல்லரசுகளின் குரலில் தொனித்தக் கடுமை, மாநாடு முடிந்த பிறகு குறைந்திருப்பது, அவர்கள் அணைத்துக்கொண்டிருக்கும் பரிதாபகரமான தோல்வியின் சாயல்தான் என்பதைச் சொல்வதாயுள்ளது.

உலக நாடுகளின் கப்பல்கள் அனைத்திற்கும் எக்காலத்திலும், சூயஸ் வழி செல்வதற்கு உரிமை உண்டு என்ற ஒரு உடன்பாட்டில் எகிப்து கையொப்பமிட்டு, அந்த உடன்பாட்டின் விதிகளில் கால்வாய் வழி செல்வதற்குரிய கட்டண விதிப்புமுறை நியாய அடிப்படையிலிருந்து விலகிவிடாமல் இருப்பதற்கான விதியையும் ஒன்றாக்கி, இந்த உடன்பாட்டை நிறைவேற்றுகிற பொறுப்பை ஐ. நா. சபையிடம் ஒப்புவிப்பது என்ற வகையான ஓர் ஏற்பாட்டை ஏற்றுக்கொள்வதில், எகிப்திற்குத் தயக்கம் ஏதும் இருக்க முடியாது. ஆனால் இத்தகைய ஒரு ஏற்பாட்டை ஏற்க, மேற்கு வல்லரசுகள் மறுப்பதானால், அவை சூயஸ் கால்வாய் போக்கு வரத்துக்காக அல்ல— இப்போது தகராறு கிளப்புவது; வேறு ஏதோ ஒரு காரணத்திற்காக என்ற எண்ணத்தைத்தான் அது, உலக மக்களிடை தோற்றுவிப்பதாக முடியும். விளைவுகள் சற்றுப்பொறுத்திருந்து பார்க்கப்பட வேண்டியவை.

பூச்செடி வளர்ப்பு

மாநில சர்க்கார்களுக்கு டில்லி கோரிக்கை

புதுடில்லி, ஆக. 24—

பூச்செடி வளர்ப்பைப் பிரபலப்படுத்துவதற்கு இந்திய விவசாய ஆராய்ச்சி நிலயம் விசேட ஏற்பாடு செய்யுமாம்.

பங்களாக்கள், பள்ளிக்கூட மைதானங்கள், கல்லூரி மைதானங்கள், சமுதாய அபிவிருத்தித் திட்டப் பிரதேசங்கள் ஆகியவிடங்களில் பூச்செடி வளர்ப்புப் போட்டிகளை அது நடத்துமாம்.

விவசாயக் கல்லூரிகளில் தோட்டக் கலைப் பாடங்களில் பூச்செடி வளர்ப்பையும் ஒரு அம்சமாகச் சேர்த்துக்கொள்ளும்படி மாநில சர்க்கார்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

90 இலட்சம் பேர் அகதிகளாக ஓடிவந்துள்ளனர்

நாளுக்கு நாள் ஓடிவருவோரின் தொகை அதிகரிக்கிறது

மத்திய மந்திரி சாவதானமாகத் தகவல் தருகிறார்!

போபால், ஆக. 24—

கடந்த ஆறு மாதங்களில் மட்டும் பாகிஸ்தானிலிருந்து 2 இலட்சம் அகதிகள் இந்தியா வந்துள்ளனர் என்றும், ஓடிவரும் அகதிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாயும், மேற்கு பாகிஸ்தானிலிருந்து 50 இலட்சம் பேரும், கிழக்கு பாகிஸ்தானிலிருந்து 40 இலட்சம்பேருமாக மொத்தம் இதுவரை 90 இலட்சம் அகதிகள் இந்தியா வந்துள்ளனர் என்றும் அகதிகள் குடி அமைப்பு இலாகா மந்திரி மேகர்சந்த் கன்னா தெரிவித்திருக்கிறார்.

இந்திய மின்சார விசிறிகள்

33 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டனவாம்

இந்தியாவில் தயாராகும் மின்சார விசிறிகள் ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலுமுள்ள 33 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. 1955ல் மொத்தம் ரூ-20 30 000 மதிப்புள்ள 17,318-விசிறிகள் அந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

சிங்கப்பூர்தான் இந்திய விசிறிகளை ஏராளமாய் வாங்கியிருக்கிறது. கணிசமான அளவில் இந்திய விசிறிகளை இறக்குமதி செய்துள்ள நாடுகளில் முக்கியமானவை இலங்கை, குவெய்ட், சூடான், மலேயா, நைஜீரியா, பாஹ்ரீன் தீவுகள், தங்கனியாகா, ஜான்சிபார் முதலியவையாகும்.

இந்தியாவில மின்சார விசிறிகளின் உற்பத்தி 1954-ல் 2 38 850 ஆக இருந்தது, 1955-ல் 2 82 236 ஆக அதிகரித்தது 1956 ஜனவரியிலிருந்து மே வரையில் மொத்தம் 1,36,450 விசிறிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

1960 - 61-லிருந்து இந்தியாவுக்கு ஆண்டொன்றுக்கு 6 00,000 மின்சார விசிறிகள் தேவைப்படும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. தற்போது மின்சார விசிறிகள் தயாரிப்பில் 19 நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன; அவைகளின் வருடாந்திர உற்பத்தி சக்தி 4,01,700 விசிறிகளாகும்.

வினோபா குற்றச்சாட்டு: மத்திய மந்திரி பதில்

விசைத்தறிகள் கைத்தறிகளைப் பாதிக்காதாம்

புதுடில்லி, ஆக. 24—

"அம்பர் இராட்டைக்கும் விசைத் தறிக்கும் ஒரே காலத்தில் ஊக்கமளிப்பதானது, ஒன்றுக்கொன்றின் நலனுக்கு முரணானதாகாது,"

என்று உற்பத்தி இலாகா மந்திரி கே. சி. ரெட்டி தெரிவித்திருக்கிறார்.

'முரணாக இருக்கும்' என்று வினோபா பாவே கூறியிருந்ததற்குப் பதிலளிக்கும்போதுதான் மந்திரி இப்படிக் கூறியிருக்கிறார்.

'ஒரு சில விசைத்தறிகள்தான் புகுத்தப்படும் என்பதால், இவை ஒன்றுகூட இப்போதுள்ள கைத்தறிகளைப் பாதிக்காது' என்றும் அவர் கூறியிருக்கிறார்.

சோவியத் நாட்டின் மக்கள் தொகை

சென்ற ஏப்ரலில் பூர்த்தியான கணக்குப்படி சோவியத் நாட்டின் மொத்த மக்கள் தொகை 20-கோடியே 2 இலட்சமாகும்.

1926-ல் 2 கோடியே 63 இலட்சம் பேர்தான் நகரங்களில் வசித்தனராம்; இது மொத்த ஜனத்தொகையில் 17 9 சதவிகிதமாகும். இவ்வாண்டின் ஆரம்பத்தில் பூர்த்தியான கணக்குப்படி 8 கோடியே 70 இலட்சம் பேர் நகரங்களில் வசிக்கின்றனராம்!

சென்ற ஆண்டு கணக்குப்படி சோவியத் இயந்திரத் தொழில்களில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள் 4 கோடியே 84 இலட்சமாகும்.

தமிழ்நாட்டில்

மேலும் ஒரு மருத்துவக் கல்லூரி

சென்னை, ஆக. 24—

'மாநில சீரமைப்புக்குப் பிறகு சென்னை மாநிலத்தில் அடுத்த கல்வி ஆண்டு முதல் ஒரு மருத்துவக் கல்லூரி ஏற்படும்'

என்று, சுகாதார அமைச்சர் ஏ பி. ஷெட்டி கூறியிருக்கிறார்.

இரு துணை மின்சார நிலையங்கள்

சென்னை, ஆக. 25—

பாபநாசம் அணைக்கட்டின் அடிவாரத்தில் துணை மின்சார நிலையம் ஒன்று கட்டுவதற்காக ரூ. 40,80,000 செலவிட சென்னை சர்க்கார் அனுமதித்துள்ளனராம். இதில் 4,000 கிலோவாட் மின்சாரம் உற்பத்தியாகும்

பைகாரா அணைக்கட்டு அடிவாரத்தில் 3,000 கிலோவாட் மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய துணை மின்சார நிலயம் ஒன்று கட்டவும் சர்க்கார் ரூ. 27 இலட்சம் செலவிட அனுமதித்துள்ளனராம்.

பல்கலைக் கழக மானியக் குழுத் தலைவர்

முன்னாள் நிதி மந்திரி தேஷ்முக் நியமனம்

புதுடில்லி, ஆக. 24—

முன்னாள் நிதி மந்திரி சி. டி. தேஷ்முக் கல்வி மந்திரியின் வேண்டுகோளுக்கு இணங்க பல்கலைக் கழக மானியக் குழுத் தலைவர் பதவியை ஏற்றுக்கொண்டிருக்கிறார் எனத் தெரியவருகிறது.

அந்தப் பதவிக்கு மாதச் சம்பளம் ரூ 3,000 ஆகும்; என்றாலும் தேஷ்முக், பெயரளவில் ஒரு ரூபாய் சம்பளம் பெற்றுக்கொண்டு அப்பதவியை ஏற்றுக்கொள்ள முன்வந்திருக்கிறாராம்.

'இன, மொழித் தொடர்புகளால் மைசூர் தென்னாட்டைச் சேர்ந்தது'

'ராஜ்யங்களுக்காக மண்டலசபையே ஒழிய— மண்டல சபைக்காக ராஜ்யங்கள் அல்ல'

'மைசூர் தென் மண்டலத்துடனேயே இணைக்கப்பட வேண்டும்'

"இராஜ்ய சீரமைப்பு மசோதா வந்தாலும் வந்தது, சர்க்காரின் 'முடிவு'களுக்கு முடிவே இல்லை. இதில் இன்னொரு வேடிக்கை, முதல் நாள் முடிவுக்கு முழுவதும் மாறாகவே அமைகிறது மறுநாளைய முடிவு! இதற்கெல்லாம் சிகரம் என்றே சொல்லலாம், இப்போது மைசூர் பற்றிச் செய்யப்பட்டுள்ள முடிவு!

"சென்னை, கேரளம், ஆந்திராவுடன் தெற்கு மண்டலசபையில் அதைச் சேர்ப்பதே அசல் திட்டம். பூகோள ரீதியாகவும், இன, மொழித் தொடர்பு. பொருளாதார பந்தம் போன்றவற்றின் பிரகாரமும் இதுவே பொருத்தமான ஏற்பாடு.

"ஆனால் இப்போதோ மைசூரை மேற்கு மண்டலசபையில் சேர்த்து விடுவதென்று திடீரென்று சர்க்கார் முடிவு செய்து எல்லோரையும் திடுக்கிட வைத்திருக்கின்றனர். இவ்வாறாகவே 'லோக் சபை'யும் தீர்மானித்துவிட்டது. பம்பாயை இருமொழி இராஜ்யமாக்குவதால் தேவையாகிய பல திருத்தங்களுள் ஒன்றாக, இந்த மாறுதலும் 'லோக் சபை' விவாதத்தின் இறுதிக் கட்டத்தில் புகுந்து சந்தடிசாக்கில் நிறைவேறிவிட்டது. பம்பாய்ப் பிரச்சினை ஒரு வழியாகத் தீர்ந்ததால் ஏற்பட்ட ஆனந்தத்தில் அப்போது யாரும் இதை கவனிக்கவே இல்லை பின்னர் தென்னிந்தியாவின் பிரதிநிதிகள் விழித்துக்கொண்டு இந்த அனர்த்தத்தை நிவர்த்திக்கக் கோரியபோது உள்நாட்டிலாகா மந்திரி பிடிகொடுத்துப் பேசவே இல்லையாம். எனவே, பிரதம மந்திரிக்கு மகஜர் கொடுப்பதில் அவர்கள் இப்போது முனைந்திருக்கிறார்கள்.

"ராஜ்யங்களுக்காக மண்டல சபைகளே ஒழிய, மண்டல சபைகளுக்காக ராஜ்யங்கள் ஏற்படவில்லை. தத்தம் சக்தி, சாதனங்களைச் சிதறவிடாமல் அந்தந்தப் பிராந்திய ராஜ்யங்கள் ஒன்றுபட்டு இயங்கிச் சீராக முன்னேறுவதற்காகவே மண்டல சபைகள் அமைக்கப்படுகின்றன. மைசூரையோ, ஆந்திரம், சென்னை, கேரளம் ஆகியவை மூன்று புறமும் சூழ்ந்துள்ளன. இந்த ராஜ்யங்களுக்கிடையே பரஸ்பர அக்கரை உள்ள விஷயங்கள் எவ்வளவோ இருக்கின்றன; எல்லைப் பிரச்சினைகளும் பல உள்ளன. இவற்றைவிட்டு, ஒரே ஒரு புறமே தொடர்புள்ள பம்பாயுடன் மைசூரைப் பிணைப்பது எப்படிப் பார்த்தாலும் பொருத்தமற்றதே.

"முதலில் உத்தேசிக்கப்பட்டபடி, குசராத்தையும் மகாராட்டிரத்தையும் தனி ராஜ்யங்களாக்காமல் ஒன்று சேர்ப்பதால் மேற்கு மண்டல சபையில் பம்பாய் தவிர வேறு ராஜ்யம் இல்லாமல் போய்விடுகிறது எனவேதான் மைசூர் சேர்க்கப்பட்டிருக்கிறது என்று இந்த விபரீத முடிவுக்கு ஒரு விசித்திர வியாக்கியானமும் கூறப்படுகிறது. அந்த மண்டல சபையில் பம்பாய்க்குத் துணை வேண்டுமானால் அதற்கு, அதிலிருந்து முற்றிலும் வேறுபட்ட வேறொரு பிராந்தியத்தைச் சேர்ந்த ராஜ்யத்தைத் தானா இழுத்துக் கொள்ள வேண்டும்? ராஜ்ய சபை மெம்பர் ஒருவரே கூறியிருக்கிறபடி ஏன் ராஜஸ்தானைச் சேர்க்கக் கூடாது? பண்டித குன்ஸ்ரு கேட்டிருப்பதுபோல் பம்பாயை தனி மண்டலமாக அமைத்தால்தான் என்ன மோசம்? இரண்டு இலட்சம் சதுரமைல் பரப்பளவும், 5 கோடி ஜனத் தொகையும் கொண்ட புதிய பம்பாய் ராஜ்யம் எவ்வளவோ ஐரோப்பிய நாடுகளைவிடப் பெரிய தாயிற்றே!"

இவ்வாறு, 'விசித்திர முடிவு' என்ற தலைப்பில், 23—8—56 'சுதேசமித்திரன்' தலையங்கத்தின் ஒரு பகுதியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

‘வெள்ளையர் ஆட்சிக்கும் காங்கிரசார் ஆட்சிக்கும் வேறுபாடு உண்டா?’

‘ஏகாதிபத்திய அடக்குமுறைகள், பிற்போக்கான நடவடிக்கைகள் ஒழிந்தனவா?’

விவரங்களைக் காட்டி ஆராய்கிருர் என். வி. நடராசன்

28—8—56 காலை 10-மணிக்கு, சேலம் நகர திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், அம்பிகா டாக்கீசில், தோழர் பி. முத்துசாமி தலைமையில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில், துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் ஆற்றிய உரையின் சுருக்கம் கீழே தரப்படுகிறது :—

“சமீபகாலமாக நமது மாகில முதலமைச்சர் காமராசர் திராவிட முன்னேற்றக் கழகத்தை இடித்துப் பேசியும், பழித்துரைத்தும் வருவதை நீங்கள் அறிவீர்கள். நீங்கள் கொஞ்சம் கூர்ந்து கவனித்தால் அவர் எந்தச் சமயத்திலிருந்து இழிவாகப் பேசிவருகிருர் என்பது தெரியும்.

“பிப்ரவரி 20-ந் தேதி தமிழ்நாடு முழுவதும், தமிழகத்திற்குச் சேரவேண்டிய தேவிகுளம், பீர்மேடு, செய்யாற்றங்கரை, சித்தூர் போன்ற பெருவாரியான தமிழர்கள் வாழும் தமிழ்ப் பகுதிகளை நியாயப்படி தமிழ் நாட்டில் சேர்க்காமல் மாகில புனரமைப்புக் குழு முடிவு செய்ததை எதிர்த்துத்தமிழ் நாடு முழுவதும் சர்வகட்சிக் கூட்டணியாரின் வேண்டுகோளுக்கிணங்க பொதுவேலை நிறுத்தம் நடத்தப் பட்டதை அனைவரும் அறிவீர்கள்.

“பிப்ரவரி 20-க்கு முன்னுல் காமராசர், வேலை நிறுத்தம் நடைபெருமல் தடுக்க பல தந்திரங்கள் செய்தார் ஆனுல் அவரது முயற்சி படுதோல்வியுற்றது. காரணம், கூட்டணி அவருடைய பசப்பு வார்த்தைக்கு மயங்காமற்போனதுதான்

“காமராசரைப் பற்றி நாம் நன்ருக அறிவோம். காமராசரைப் பார்த்து, ‘தமிழகத்திற்குச் சேர வேண்டிய தமிழ்ப் பகுதிகளை மீட்கப்போராடுவோம்; இல்லையென்ருல் நாங்கள் ஆட்சிப்பிடியிலிருந்து விலகிவிடுகிறேும் என்று அறிக்கைவிடுங்கள்— போராட்டத்தை நிறுத்திவிடுகிறேும்’— என்று கேட்டோம். உண்மையில் தமிழ் நாட்டிற்கு நன்மை செய்பவராக இருந்திருந்தால் — தமிழ் நாட்டின்மீது கொஞ்சமாவது பற்றுக்கொண்டவராக இருந்திருப்பாரேயானுல் காமராசர், அண்ணு அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கியிருக்க வேண்டும். நல்லவேளையாகக் காமராசர் நயவஞ்சகத்திற்கு சர்வகட்சிக் கூட்டணி பலியாகவில்லை.

“காமராசரின் சூழ்ச்சி மண்ணைக் கவ்விற்று ; ஊசமன் கமிஷன் சென்னைக்கு வந்திருந்த காலத்தில் தமிழ்நாட்டு மக்கள் செய்து காட்டிய மாபெரும் பொதுவேலை நிறுத்தத்தையும் தோற்கடிக்கும் முறையில் பிரம்மாண்டமான வேலை நிறுத்தம் பிப். 20-ல் செய்து காட்டினேும். ‘எப்படியேனும் வேலைநிறுத்தம நடைபெருமல் நிறுத்திவிடுவேன்—’ என்று மார் தட்டி நின்ற காமராசரின் எண்ணம் சரிந்து விட்டது அதற்குப் பிறகுதான் அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தாக்கிப் பேசிவருகிருர். போதாக்குறைக்கு தி. மு. கழகம் தேர்தலில் ஈடுபடப் போகிறதென்று கேட்டவுடனேயே காமராசர், நிலை தடுமாறி நிற்கிருர் !

“மலையாளத்தார் தமக்குச் சேர வேண்டிய பகுதிகள் பறிபோகாமல் இருப்பதற்கும், மேலும் பல சாதகங்களைப் பெறுவதற்கும் முயன்று வெற்றி பெற்றிருக்கிருர்கள் ; ஆந்திராவில் கோபால் ரெட்டியும், மைசூரில் அனுமந்தையாவும்கொஞ்சம் விழிப்பாக இருந்தார்கள் ; ஆனுல் காமராசரின் துரோகத்தனத்தால் நமக்கு உரித்தான பூமியை—சேர வேண்டிய பகுதிகளை இழந்துவிட்டோம். இதற்கெல்லாம் காமராசர் போன்ற நாட்டுப்பற்றில்லாத மந்திரிகள்தான் காரணம் என்பது யோசித்துப் பார்த்தால் தெரியும்.

“சென்ற தேர்தல் காலத்தில் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறிய வாக்குறுதிகள் பலவற்றைக் காங்கிரஸ் சர்க்கார் காற்றில் பறக்கவிட்டு வருகிருர்கள் ; அதுமட்டுமா? காங்கிரசும், காங்கிரஸ் தலைவர்களும் வெள்ளையர்கள் ஆட்சியின்போது எதெதை அக்கிரமம் என்று கண்டித்தார்களோ — எந்தெந்த முறைகள் ஏகாதிபத்திய வெறியின் எடுத்துக்காட்டு என்று சித்தரித்தார்களோ, அந்தப் பிற்போக்குத்தனமான நடவடிக்கைகளில்—அதுவும் குயடிரசு ஆட்சியின் பேரால் இன்று மூழ்கிக் கிடக்கின்றனர் !

“சர்க்கார் ஊழியர்களுக்கு ஊதியம் சிறிது உயர்த்தப்பட வேண்டுமென்ருல், பணமில்லை ; போலீஸ் ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு என்று வேண்டுகோள் விடுத்தால் கசானுவில் பணமில்லை என்று கைவிரிக்கிருர் நிதி அமைச்சர் சுப்பிரமணியம்; அது போலவே ஏழை நடுத்தர மக்கள் ஓரளவாவது நல்வாழ்வு பெற வேண்டுமென்று கோரிக்கைகள் கொடுத்தால், அதற்கெல்லாம் போதிய பணமில்லை என்று கண்டிப்பாகக் கூறுகிறது சர்க்கார்; கூறுவது மட்டுமல்ல— கோரிக்கைகள் விடும் மக்களை அடக்குமுறைகொண்டு தாக்கவும் செய்கிறது

“ஆனுல் இந்திய அரசியலாரின் தலைவர் இராசேந்திரர் அவர்கள், தமிழகத்தின் தலைநகரிலும், மதுரை போன்ற முக்கிய நகரங்களிலும் பவனி வருவதற்காக மக்களின் வரிப் பணத்திலிருந்து இலட்சக்கணக்கான பணம் செலவிடப்பட்டிருக்கிறது.

“வெள்ளைக்காரர்கள் அந்நியர்கள்; நாட்டைச் சுரண்ட வந்தவர்கள்; அவர்கள் ஆட்சி பீடத்திலிருந்தபோது இந்த அக்கிரமங்களைச் செய்தார்களென்ருலும் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை; ஆனுல், ‘அந்த அக்கிரமங்களை ஒழித்துக்கட்டுவோம்’ என்று உரத்தக் குரலில் உறுதி கூறிய தேசியத் தலைவர்கள் அந்த வெள்ளையர்களைவிடக் கேவலமாக நடக்கிருர்களென்ருல், இவர்களை— இன்று ஆட்சிபீடத்தில் அமர்ந்துகொண்டு இவ்விதக் காரியங்களில் ஈடுபட்டிருப்பவர்களை நாம் என்ன பெயரிட்டு அழைப்பது? இந்த நடவடிக்கைகளையும் எதற்கு ஒப்பிடுவது என்றுதான் தி. மு. கழகம் பொதுமக்களை சிந்திக்கச் சொல்லுகிறது.

“இந்திய அரசியலாரின் போக்குதான் இவ்விதக் கோளாறு நிறைந்ததாக இருக்கிறதென்ருல் சென்னை அமைச்சர்களின் நடவடிக்கைகள் அந்தக் கோளாறுகளுக்குக்குனிந்து கொடுத்து நம் நாட்டு மக்களின் வாழ்வை வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கவெறிக்கு இலக்காகும்படி செய்வதாகவிருக்கின்றன.

“நாட்டுப்பற்ருே, மொழிப்பற்ருே அல்லது அரசியல் விவேகமோ சிறிதுமின்றி நம் தாயகமாம் திராவிடத்தின் இயற்கை வளத்தையும் அரசியல் உரிமையையும் — குறிப்பாகத் தமிழர்களின் வாழ்வையும் இந்தியஏகாதிபத்தியத்தின் உலுத்த வாழ்வுக்குக் காட்டிக் கொடுத்து வருகின்றனர்.

“தேவிகுளம், பீர்மேடு போன்ற நமக்கு உரித்தான பகுதிகள் தமிழகத்துடன் சேர்க்கப்படவேண்டும் என்ற பிரச்சினையில், தமிழ் நாட்டு அமைச்சர்களும், காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்களும் செய்த மாபெரும் துரோகத்திற்கு மக்கள் தக்க புத்தி புகட்டப் போகிருர்கள் என்பது உறுதி.

“தி. மு. கழகம் தேர்தலில் ஈடுபடப் போகிறதென்ருல் ஏதோ சில இடங்களைப் பெறுவதற்காக மட்டுமே என்று எண்ணுபவர்களுக்குக் கூறுகிறேும்— அவ்விதம் சட்ட மன்றத்தில் இடம் பெறுவதற்கு இவ்வளவு பெரிய இயக்கம் தேவையில்லை. அண்ணு அவர்களைத் தேடிவந்த முதலமைச்சரிடம் ஜாடை காட்டியிருந்தாலே போதும்—சட்ட மன்ற உறுப்பினர் மட்டுமல்லாமல், அமைச்சர் பதவியும் கிடைத்திருக்கக் கூடும். எனவே, தி. மு. கழகம் தேர்தலில் ஈடுபடுகிறதென்ருல், மக்களின் ஆதரவால் கிடைக்கக்கூடிய வெற்றி எந்த அளவுக்கு இருக்கிறதோ அதற்கேற்ப சட்டமன்றத்திலும் பணியாற்றவும், அதே நேரத்தில் காங்கிரஸ் ஆட்சியினர் மக்களுக்குச் செய்துள்ள துரோகங்களை எடுத்துக் காட்டி, மக்களை விழிப்புறச் செய்வதும் கழகத்தின் முக்கிய நோக்கமாகும்.

“எனவே, வரப்போகும் பொதுத் தேர்தலில் பொது மக்கள் எச்சரிக்கையாயிருந்து இன்றைய ஆளும் வர்க்கத்தினரின் பிற்போக்குத் தன்மைக்குப் புத்தி புகட்டத் தயாராயிருக்குமாறு திராவிட முன்னேற்றக் கழகம் வேண்டிக் கேட்டுக் கோள்கிறது.”

‘பர்மா இந்தியருக்கு நியாயமான நஷ்ட ஈடு வேண்டும்’

இராசா சர். முத்தையா (செட்டியார்) கோரிக்கை.

சென்னை, ஆக. 24—
“பர்மிய அரிசி இந்தியாவிற்கு வந்துகொண்டிருக்கிறது; அப்படியிருக்கும்போது, பர்மிய சர்க்கார் இந்தியர்களுக்குத் தர வேண்டியுள்ள நஷ்டஈடு பாக்கியை அந்த அரிசிக்குப் பணம் தரும்போது சரிக்கட்டிக் கொண்டு இந்தியர்களுக்கு அந்தப் பணத்தைத் தந்தால் என்ன ?

“இந்தியாவிலிருந்து வெளிநாட்டு மூலதனம் ஏராளமானவற்றை வெளிநாடுகளுக்குச் செல்ல இந்திய சர்க்கார் அனுமதிக்கும்போது இலங்கை, பர்மாபோன்ற நாடுகளிலுள்ள இந்தியர்கள் பணம் எடுத்துவருவதற்கு ஏன் பெரிய]தடையாக இருக்கவேண்டும் ?

“மனித நியாயத்தின் அடிப்படையில் நாங்கள் நீதியுடன் நடத்தப்படவேண்டுமென்றுதான் கோருகிறேுமே தவிர, விசேட உரிமைக்காக அல்ல !

“இந்தியாவில் நிலம் வைத்திருந்தவர்களிடத்திலிருந்து நிலம் பறிக்கப்பட்டபோது தரப்பட்ட நஷ்டஈட்டின் அடிப்படையில் நஷ்டஈடு தரப்பட்டால் அதுவே போதும்,”

என்று, இராசா சர். முத்தையா செட்டியார் அவர்கள், கூட்டம் ஒன்றில் பேசும்போது குறிப்பிட்டிருக்கிருர்.

பர்மாவிற்கு இந்தியத் தூதராக நியமிக்கப்பட்டிருக்கும் லால்ஜி மெஹ்ரோத்ரா என்பவருக்குத் தென்னிந்திய வர்த்தகக் கழகம் தந்த வரவேற்பின்போதுதான் முத்தையா செட்டியார் அவர்கள் மேற்கண்டவாறு பேசியிருக்கிருர்.

காங்கிரஸ் சர்க்காரின் அபார சாதனை

கிராமத் தலைவர் தரும் நற்சாட்சிப் பத்திரம்

கிராமங்களில் சர்க்காரின் அபிவிருத்தி வேலைகள்—அதுதான், ‘சமுதாய நலத்’ திட்டம், ‘தேசிய விஸ்தரிப்புத் திட்டம்’ இவை போன்ற வேலைகள் எத்தனை தூரம் பயன் தந்திருக்கின்றன என்பதை அறிய வேண்டுமா? இதோ கேளுங்கள்—

மாகிலத்தில் ஓரோர் பகுதிகளில் நடக்கும் ‘அபிவிருத்தி’ வேலைகளை இதர பகுதியினர் பார்வையிட்டு விபரம் தெரிந்து கொள்வதற்காக என்று கூறி ஒவ்வொன்றிலும் 40 பேர் அடங்கிய இரண்டு கிராமத் தலைவர்கள்—குழுக்கள் மதுரையிலிருந்தும் கோவையிலிருந்தும் புறப்பட்டுச் சென்று பல அபிவிருத்தித் திட்டப் பிரதேசங்களையும் பார்த்துவிட்டுச் சென்னை வந்தனர்.

இந்தச் சுற்றுப் பயணத்தை ஏற்பாடு செய்த சர்க்கார், குழுவினருக்கு சென்னையில் விருந்து ஒன்று வைத்தனர். அந்த விருந்திற்குப் பிறகு ஒரு கிராமத் தலைவர் கூறியதைக் கேளுங்கள் :—

“கிராமங்களில் சுகாதார ஏற்பாடுகள் போதிய அளவு கவனிக்கப்படவில்லை! சில இடங்களில் மருத்துவ மனைகள் இருக்கின்றன—டாக்டர்கள் இல்லை! ஆஸ்பத்திரியும் இருந்து டாக்டரும் இருந்தால், மருந்து இல்லை!”

என்று, கிராமத் தலைவர், இந்த சர்க்காரின் அபிவிருத்தி வேலைகள் பற்றி நற்சாட்சிப் பத்திரம் வழங்கியிருக்கிருர்.

போதாதா? சர்க்காரின் சாதனை!

மகளிர் மன்றம்

மகளிர் மன்றம் அமைப்புக் கூட்டம், 21—8—56 மாலை 6 மணிக்கு, தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது; நகரிலுள்ள தாய்மார்கள் பலர் வந்திருந்து சிறப்பித்தனர்.

டாக்டர் சத்தியவாணி-முத்து அம்மையார், மகளிர் மன்றம் துவக்கத்தின் அவசியத்தை விளக்குகையில் தாய்மார்கள் அனைவரும், சாதி—கட்சி வேறுபாடுகளின்றி சமுதாய நலனுக்கான பணியில் ஈடுபட்டுத் தமிழகத்தின் உயர்வுக்காகப் பணியாற்ற வேண்டும் என்ற குறிக்கோளுக்காகவே இம் மன்றம் துவக்கப்படுகிறதென்றும், இதற்கான முயற்சியில் மகளிர் அனைவரும் ஒத்துழைப்பைத் தருமாறும் கேட்டுக்கொண்டார்.

இந்த அமைப்புக் கூட்டத்திற்குத் தோழியர் புவனேசுவரி-நடராசன் தலைமை வகித்தார். வந்திருந்த தாய்மார்கள் தங்கள் தங்கள் கருத்தை அளித்த பின்னர், கீழ்க்கண்டவாறு ‘மகளிர் மன்றம்’ அமைக்கப்பட்டது :—

தலைவர் : சத்தியவாணிமுத்து.
துணைத் தலைவர்கள் : ராணி-அண்ணுதுரை;
அருண்மொழி-வில்வம்.
செயலாளர்கள் : வெற்றிச்செல்வி-அன்பழகன்;
புவனேசுவரி-நடராசன்.

செயற்குழுவினர் : அலமேலு-அப்பாதுரை, மிரண்டா-கசேந்திரன், ராணி-கலைச்செழியன், கே. நாகரத்தினம்-கோவிந்தசாமி, கே. எம். ராணி-கண்ணபிரான், மு. தயாளு-கருணுநிதி, கல்யாணி-கே. ஆர். இராமசாமி, சு. கிருஷ்ணவேணி-பாலன், பூங்கோதை, சி. ஆர். கமலா-பாலசுந்தரம், கே. வெற்றிச்செல்வி, நித்தியா, பங்கயற்செல்வி, மா. சுந்தராம்பாள்-இளஞ்செழியன், இரா. நீலா, சுலோசனு-சிற்றரசு, பரமேசுவரி-ஆசைத்தம்பி, பச்சையம்மாள்-பொன்னுசாமி, ஜோதி-நாகராசன், இராசம்மாள், கலைச்செல்வி, எம். ஆர். மோகனசுந்தரி, எம். ஆர். கோமளவல்லி ஆகியோர்.

டாக்டர் தருமாம்பாள் அம்மையார், செந்தமிழ் விறலி டி. ஏ. மதுரம் அம்மையார், டி. மனேன்மணி - சண்முகம் ஆகியோரை மகளிர் மன்றக் காப்பாளர்களாக இருக்குமாறு கேட்டுக் கொள்வதென ஒரேமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

செயற்குழுவில் மேலும் சிலரைச் சேர்த்துக் கொள்வதென்றும், மகளிர் மன்றத் துவக்க விழாவை விரைவில் நடத்துவதென்றும், மன்றத்திற்குப் பொது உறுப்பினர்களைச் சேர்ப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

தென்மண்டல இரயில்வே தலைமை அலுவலகத்திற்குப் புதிய கட்டிடம்

புதுடில்லி, ஆக. 24—
தென் இரயில்வே தலைமை அலுவலகத்திற்குப் பல மாடிகளும், குளிர்ச்சி சாதனங்களும் உடைய புதிய கட்டிடம் ஒன்று சென்னை நகரில் ரூ 48 இலட்சம் செலவில் கட்டப்படவிருப்பதாக இரயில்வே இலாகா துணை மந்திரி அழகேசன் மக்கள் சபையில் கூறியிருக்கிருர்.

தென்னுட்டில் இப்படி ஒரு பெரிய கட்டிடம் எழுவது கண்டு பொறுக்க முடியாததாலோ என்னவோ, சேத் கோவிந்ததாஸ் என்ற வடநாட்டுக்காரர், “இந்தியாவைப் போன்ற ஒரு ஏழை நாடு குளிர்ச்சித் தளங்கள் உள்ள கட்டிடங்கள் கட்ட முடியுமா?” என்று கேள்வி எழுப்பினுராம்.

பதிலளித்த மந்திரி லால் பகதூர் சாஸ்திரி, ‘சென்னையில் வெப்பம் மிகக்கடுமை’ என்று கூறியதுடன், ‘அதிகாரிகள் — குமாஸ்தாக்கள் என்ற பாரபட்சம் ஏதுமின்றி அனைவருக்குமே குளிர்ச்சி வசதி உண்டு’ என்றும் கூறியிருக்கிருர்.

ஆறு ஆண்டு வெள்ளங்களினால் ரூ. 287 கோடி நஷ்டம்

நிவாரணத்திற்காக மட்டும் ரூ. 45கோடி செலவானதாக தகவல்

புதுடில்லி, ஆக. 25—

கடந்த ஆறாண்டுகளில், இந்தியாவில் ஏற்பட்ட வெள்ளங்களினால் ஏற்பட்ட சேதம் எவ்வளவு தெரியுமா?

பலியான மக்கள், கால்நடைகள் நீங்கலாக ரூ 287 கோடி நஷ்டமேற்பட்டதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறதாம்.

மத்திய நீர்-மின்சாரக் கமிஷன் தலைவரான கன்வார் செயின் என்பார் இந்தத் தகவலை அளித்திருக்கிறார்.

இந்த ஆறாண்டுகளில் ஏற்பட்ட வெள்ளங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக மட்டும் ரூ. 45 கோடி செலவிடப்பட்டிருப்பதாயும் அவர் கூறியிருக்கிறார்.

இந்த வெள்ளம் ஏற்பட்டிராவிட்டால், தேசிய வருமானம் ரூ. 100 கோடிவரை அதிகரித்திருக்க முடியும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

வேறு பல நாடுகளிலும் இது போன்ற வெள்ளங்களும், அதனால் சேதங்களும் ஏற்படுவதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

'சீனாவிலும், பிலிப்பைன்சிலும், ஆண்டொன்றுக்கு முறையே ரூ. 62·5 கோடி; ரூ. 11 கோடி நஷ்டம் விளைவிக்கிற வெள்ளச் சேதங்கள் ஏற்படுகின்றன' என்றும் அவர் கூறியிருக்கிறார்.

"அமெரிக்காவில் கடந்த 28 ஆண்டுகளில் 391 வெள்ளத் தடுப்புத் திட்டங்களுக்காக ரூ. 2,200 கோடிவரையில் செலவிடப்பட்டிருக்கிறது; என்றாலும் கடந்த 1955-ம் ஆண்டில்கூட அங்கு வெள்ளம் ஏற்பட்டது. எதிர்காலத்தில் 364 திட்டங்களுக்காக சுமார் ரூ. 3,600 கோடிவரையில் அமெரிக்க சர்க்கார் செலவிட எண்ணியுள்ளனர்" என்றும் அவர் தகவல் கூறியிருக்கிறார்.

★

ரூ. 27 கோடி செலவில் வெள்ளத்தடுப்புத் திட்டம்

உ. பி. மாநிலத்தில் நிறைவேற்றப்படும்!

அலகாபாத், ஆக. 25—

ரூ. 27 கோடி செலவாகும் வெள்ளத் தடுப்புத் திட்டம் ஒன்றை மத்திய அரசாங்கத்திடம் உ. பி. சர்க்கார் தந்திருப்பதாகத் தெரியவருகிறது.

இந்தத் தகவலை உ. பி. நீர்ப்பாசனத்துறை அமைச்சர் திரு கமலபதி திரிபாதி தெரிவித்திருக்கிறார்.

இந்தத் திட்டம் டில்லியால் ஏற்றுக்கொள்ளப்பட்டு இரண்டாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நிறைவேற்றி வைக்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

★

பல இலட்சம் பெறுமான கள்ளத் தங்கம்

கண்ணனூர் அருகே கைப்பற்றப்பட்டது

கண்ணனூர், ஆக 26—

இந்தியாவிலேயே வேறெப்போதும் பிடிபடாத அளவு திருட்டுத் தங்கம், கண்ணனூரை அடுத்த தல்லாத் எனும் இடத்தில் மத்திய சுங்க இலாகாவினரால் கைப்பற்றப்பட்டிருக்கிறதாம்.

ரூ. 38,40,000 பெறுமான 32,340 தோலா கள்ளத் தங்கம் கைப்பற்றப்பட்டதாகத் தெரியவருகிறது.

பஞ்சாப் மாநிலத்தில் 477 கொலைகள்!

சாந்திகார், ஆக 25—

1955-ம் ஆண்டில் மட்டும் பஞ்சாப் மாநிலத்தில் 477 கொலைகள் நடந்திருக்கின்றன.

1956-ல், ஜூலை 31-ந் தேதி முடிய 302 கொலைகள் நடைபெற்றிருப்பதாகவும் முதன் மந்திரி பிரதாப் சிங் கெய்ரான் தெரிவித்திருக்கிறார்.

செருப்பு தைக்கப் பயிற்சி நிலையங்கள்

சென்னை ஆக்ரா நகரங்களில் ஏற்படும்

புதுடில்லி, ஆக 24—

செருப்பு, மற்றும் தோல் சாமான்கள் தயாரிப்பதற்காகப் பயிற்சியளிக்கும் இரு நிலையங்கள் ரூ 9 இலட்சம் செலவில் ஆக்ராவில் ஒன்றும், சென்னையில் ஒன்றுமாக நிறுவப்படும் என்றும், இதற்கான திட்டத்தை டில்லி ஏற்றுக்கொண்டுவிட்டதாகவும் தெரியவருகிறது.

சென்னை—பெரம்பூரில் மாநில சர்க்கார் ஏற்கனவே ஏற்படுத்தியுள்ள செருப்பு நிலையத்தில், இதற்கான பயிற்சி அளிக்கப்படுமாம்.

திருச்சி மாவட்ட தி. மு. கழகக் கிளை செயலாளர்களுக்கு:

'செப்டம்பர் 10-ந் தேதி முதல் 17-ந் தேதிவரை திருச்சி மாவட்டத்தில் தோழர் மு. கருணாநிதி அவர்கள் சுற்றுப்பிரயாணம் செய்ய ஒப்புக்கொண்டுள்ளார். அவருடன் திருச்சி மாவட்டச் செயலாளர் தோழர் அ. பெ. தருமலிங்கம் அவர்களும் வருவார். கூட்டம் ஏற்பாடு செய்ய இருக்கிற கிளைக் கழகங்கள், இம்மாதம் 30-ந் தேதிக்குள் மாவட்டச் செயலாளர் அவர்கட்கு எழுதி தேதியை உறுதிப்படுத்திக் கொள்ளவும்,"

என்று, திருச்சி மாவட்ட தி. மு கழகத் துணைச் செயலாளர் ஜி. பராங்குசம் அவர்கள் அறிவிக்கிறார்.

ஆமதாபாத் தி. மு. கழக உறுப்பினர்கட்கு:

"29, 30—8—56 ஆகிய இரு நாட்களிலும் ஆமதாபாத் தி. மு. கழக ஆண்டு விழாவும் தேர்தல் நிதி சிறப்புக் கூட்டமும் நடைபெற இருந்த நிகழ்ச்சிகள், பம்பாய் இருமொழி மாநில அமைப்பை எதிர்த்து ஆமதாபாத்தில் நடந்த கிளர்ச்சிகளினால் தடைப்பட்டு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது; மீண்டும் இந்நிகழ்ச்சிகளுக்கு நாள் குறிப்பிட ஆ. தி. மு. கழகப் பொது உறுப்பினர் கூட்டம் 30—8—56 காலை 9 மணிக்கு சமால்பூர் கழக இல்லத்தில் நடைபெறும்; உறுப்பினர்கள் அனைவரும் வருகை தருமாறு கோருகிறேன்"

என்று, ஆமதாபாத் நகர தி. மு. கழகச் செயலாளர் தோழர் இரா. தாணிகாசலம் அறிவிக்கிறார்.

திரு-கொச்சியில் ஜனாதிபதி ஆட்சி

நீடிப்பதற்கு மசோதா

திரு-கொச்சியில் ஜனாதிபதியின் ஆட்சிக் காலத்தை நீடிக்கும் மசோதா ஒன்று இந்த வார மக்கள் சபைக் கூட்டத்தில் கொண்டுவரப்படும் என்று தெரியவருகிறது.

திரு-கொச்சியில் கடந்த மார்ச்சு திங்கள் 26-ந் தேதியன்று குடியரசுத் தலைவர் ஆட்சி அமுலுக்கு வந்தது.

பரம்பிக்குளம் ஆற்றுநீரைப் பயன்படுத்தும் திட்டம்

திரு-கொச்சி அதிகாரிகள் பரிசீலிப்பர்

திருவனந்தபுரம், ஆக. 26—

பரம்பிக்குளம், மற்றும் சாலக்குடியில் உள்ள ஆறுகளின் நீரைப் பயன்படுத்திக் கொள்வதற்கான சென்னை சர்க்காரின் திட்டங்களைப் பூரணமாகப் பரிசீலிக்குமாறு தனது பிரதம எஞ்சினீயர்களை திரு-கொச்சி மாநில சர்க்கார் கேட்டிருக்கிறதாம்.

பொள்ளாச்சி மாநாட்டிற்குப் பிறகு சென்னை சர்க்கார் திட்டங்கள் குறித்து அறிவித்துள்ள கருத்துக்களின் அடிப்படையில் பரிசீலனை நடைபெறவேண்டும் என்றும் உத்தரவு கூறுகிறதாம்.

பொள்ளாச்சியில் கடந்த ஜூலைத் திங்களில் இருமாநில சர்க்கார்களின் எஞ்சினீயர்களும் சென்னை சர்க்காரின் திட்டங்கள் குறித்து விரிவாக விவாதம் நடத்தினர் என்பது நினைவிருக்கலாம்.

பறிபோன செங்கோட்டை மலைப்பகுதிகள்

திரும்பக் கிடைக்கும் வாய்ப்பு உண்டாம்

செங்கோட்டைத் தாலுகாவில் பறிகொடுத்த பகுதிகள் போக எஞ்சிய பகுதியிலும் சில மலைப் பகுதிகளைத் தமது திறமைக் குறைவினால் சென்னை சர்க்கார் கோட்டைவிட்டார்கள் அல்லவா?

அந்தக் கோட்டை விட்ட பகுதிகளை மீண்டும் பெற்றுத் தரவேண்டும் என்று உள்நாட்டு மந்திரி பண்டித பந்திற்கு சென்னை முதல்வர் காமராசர் கடிதம்கூட எழுதினாரல்லவா?

'ஏற்கனவே உள்ள ஏற்பாட்டைக் குலைப்பதற்கில்லை' என்று பண்டித பந்த், மாநிலங்கள் சபையில் தெரிவித்திருந்த போதிலும், இப்போது, திரு-கொச்சி, சென்னை சர்க்கார்கள் மீண்டும் ஒரு ஒப்பந்தம் செய்துகொள்வதின் மூலம் அந்தப் பகுதிகளைப் பெறமுடியும் என்று பந்த் கூறியிருக்கிறாராம்.

அதற்கான ஏற்பாடு செய்வதில், டில்லி பாராளுமன்றத்தில் உள்ள தமிழ் உறுப்பினர்கள் ஈடுபட்டிருக்கின்றனராம்.

மொம்பாஸா கண்காட்சியில் இந்தியக் காட்சிமண்டபம்

மொம்பாஸா, ஆக. 25—

மொம்பாஸாவில் ஆரம்பிக்கப்பட்ட கண்காட்சியின் இந்தியக் காட்சி மண்டபத்துக்குத் திரளான மக்கள் வருகை தந்தனர். காட்சியை கென்யா கவர்னர் சர் ஈவ்லின் பேரிங் திறந்துவைத்தார்.

இந்தியத் துணிகள், சரிகை வேலைப்பொருள்கள், நுண் கருவிகள், சைக்கிள்கள் முதலிய பொருள்கள் இந்தியக் காட்சி மண்டபத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கின்றன.

இக்காட்சி 17 ஆண்டுகளுக்குப் பிறகு இப்பொழுதுதான் மீண்டும் நடைபெறுகிறது.

மாலுமிகள் பயிற்சி— அடுத்தத் தேர்வு

சென்னையில் நடைபெறும்

சென்னை, ஆக 26—

மாலுமிகள் பயிற்சிக்கான அடுத்தத் தேர்வு, சென்னை பழைய உயர் நீதிமன்றக் கட்டிடத்தில், செப். 3-ந் தேதி காலை 10 மணிக்கு நடைபெறும். விசாகப்பட்டணத்திலுள்ள பயிற்சிக் கப்பல் 'மேகலா'வில் பயிற்சியாளராகச் சேர்த்துக் கொள்ளப்படக்கூடியவர்களை வர்த்தகக் கப்பல் இலாகாவின் பிரதம அதிகாரி தேர்ந்தெடுப்பார்; பயிற்சிக் காலத்தில் அவர்களுக்கு இருப்பிட வசதியும் உணவும் இலவசமாக அளிக்கப்படும்.

அனுபவம் இல்லாத பள்ளிச் சிறுவர்களும், ஏற்கெனவே பேட்டிக்கு வந்து நிராகரிக்கப்பட்டவர்களும் இப்போது கவனிக்கப்படமாட்டார்கள்.

80,000 டன் கோதுமை 25,200 டன் அரிசி

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதாம்

இம்மாதம் ஆஸ்திரேலியாவிலிருந்தும் அமெரிக்காவிலிருந்தும் ஏறக்குறைய மொத்தம் 80,000 டன் கோதுமை இந்தியத் துறைமுகங்களுக்கு வந்துசேர்ந்தது. சென்ற வாரத்தில் நான்கு கப்பல்கள் — ஆஸ்திரேலியாவிலிருந்து இரண்டு கப்பல்களும், அமெரிக்காவிலிருந்து இரண்டு கப்பல்களும்— சுமார் 28,000 டன் கோதுமையை கல்கத்தா, விசாகப்பட்டணம், பம்பாய் ஆகிய துறைமுகங்களில் இறக்கிவிட்டுச் சென்றன. இதைத் தவிர, மாத ஆரம்பத்தில் அமெரிக்காவிலிருந்தும் ஆஸ்திரேலியாவிலிருந்தும் 51,800 டன் கோதுமை இறக்குமதியாயிற்று.

பர்மாவிலிருந்து, சென்ற மாதம் முதல் வர ஆரம்பித்த அரிசி இறக்குமதியில், இதுவரை மொத்தம் 25,245 டன் கிடைத்திருக்கிறது.

ஆகஸ்ட் மாத இறுதிவாக்கில், அரிசியுள்பட மேற்கொண்டு மொத்தம் 1,28,000 டன் உணவுத் தானியம் வந்துசேருமென்று எதிர்பார்க்கப்படுகிறது. செப்டம்பர் மாதத்தில் முதல் மூன்று வார காலத்தில் சுமார் 1,25,000 டன் இறக்குமதியாகும்.

கோஷ்டிச் சண்டை காரணமாகக் காங்கிரசிலிருந்து வெளியேறியவர்கள்

காங்கிரசிற்கு எதிராக முன்னணி அமைக்கின்றனர்

'அவியல் கொள்கை' ஒன்றை உருவாக்குவார்களாம்

உ. பி. காங்கிரசிலிருந்து கோஷ்டிச் சண்டை காரணமாக வெளியேறிவிட்ட காங்கிரசார் மாநிலத்தின் முன்னாள் நிதிமந்திரியும் முன்னாள் காங்கிரஸ் தலைவருமான எஸ். கே. டி. பாலிவால் தலைமையில் கூடி, விடுதலைப் போராட்டத்தில் பங்கு பெற்றவர்கள்—ஆனால், இப்போது காங்கிரசிலிருந்து வெளியேறிவிட்டவர்களைக் கொண்டு ஒரு முன்னணி அமைப்பது என்று முடிவு செய்திருக்கிறார்களாம்.

'நாட்டில் ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்காக உறுதியானதோர் முற்போக்கு ஐக்கிய முன்னணியை அமைக்கப் பாடுபடுவதுதான் இந்த இயக்கத்தின் நோக்கமாகும்'

என்றும் மாநாட்டில் பேசப்பட்டதாம்.

ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டவர்கள் அனைவரையும் இந்த இயக்கத்திற்குள் கொண்டு வருவதற்கும், காந்தீயம்—மார்க்சீயம் இரண்டையும் சேர்ந்த ஒரு கலப்படக் கொள்கையை உருவாக்குவதற்கும் இயக்கம் பாடுபடுமாம்.

கப்பல் தளத்தில் பயிற்சிப் பள்ளிக்கூடம்

புதுடில்லி, ஆக. 25—

'விசாகப்பட்டணத்தில் தற்போதுள்ள இந்துஸ்தான் கப்பல் தளத்துக்கும் உத்தேச இரண்டாவது கப்பல் தளத்துக்கும், உடனடியாகத் தேவைப்படுகிற பயிற்சிபெற்ற கப்பல் தள ஊழியர்களைத் திரட்டுவதற்குப் பயிற்சியளிப்பதற்கான பயிற்சிப் பள்ளிக்கூடம் ஒன்றை ஆரம்பிப்பதற்கான ஒரு திட்டத்தை அத்தளம் இப்போது தயாரித்திருக்கிறது; அத்திட்டம் இவ்வருட டிசம்பர் மாதத்தில் செயல்படத் துவங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது' என்று மக்கள் சபையில் தகவல் தரப்பட்டுள்ளது.

பழவேற்காட்டில் திருக்குறள் விழாப் பொதுக்கூட்டம்

29—8—56 மாலை 5-மணியளவில், பழவேற்காடு இளைஞர் முற்போக்குக் கழகச் சார்பில், திரு. வி. க. திடலில், தோழர் பி. செல்வராஜ் தலைமையில் திருக்குறள் விழாப் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர் என். சிவரத்தினம், தோழியர் சத்தியவாணி முத்து, அ. நடராசன், தா. வீ. குப்புசாமி, இரா. சு. சு. மணி ஆகியோர் பேசுவர்.

'அம்பர் சர்க்கா' பயிற்சி நிலையங்கள்

சென்னை, ஆக. 25—

மாநிலம் முழுமையிலுமாக, அம்பர் சர்க்காவின்மூலம் நூல் நூற்பதற்கான பயிற்சி அளிப்பதற்காக ஐந்து 'பரிசிரமாலயங்கள்' திறக்க அரசாங்கம் அனுமதியளித்திருக்கிறது.

'ஒவ்வொரு பரிசிரமாலயத்திலும் ஆண்டுதோறும் 400 பேருக்குப் பயிற்சி அளிக்கப்படும்; பயிற்சிக் காலம் 3—மாதங்களாகும்; பயிற்சிக்காலம் முடிந்த பிறகு தவணை அடிப்படையில் பணம் செலுத்தக்கூடிய வசதியுடன் சொந்தமாக ஒரு 'அம்பர் இராட்டை'யை வாங்கிக்கொள்ள உடன்படுகிறவர்கள் மட்டுமே பயிற்சி வகுப்புகளில் சேர்த்துக்கொள்ளப்படுவர்' என்று கூறப்படுகிறது.

ஆரம்பத்தில், பயிற்சிக்கான சாதனங்கள் வாங்கமட்டும் ரூ. 42,000 செலவாகுமாம். இது தவிர, பயிற்சித் திட்டத்திற்கு ஆண்டொன்றுக்கு ரூ. 8¾ இலட்சம் செலவாகுமாம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம் ஏ.